செ.வெ.எண்:32 நாள்:14.09.2018

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டம் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.3கோடியே 62 லட்சத்து 98ஆயிரம் மதிப்பிலான 33 / 11 கிலோ வாட் கொண்ட துணை மின்நிலையத்தினையும், ரூ.3 கோடியே 78 இலட்சம் மதிப்பிலான ஆயுதப்படை தலைமை அலுவலகத்தையும் காணொலிக்காட்சி மூலம் திறந்துவைத்தார்கள்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் ரெங்கநாதபுரம் பகுதியை சுற்றியுள்ள பகுதிகளுக்கு 12 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஆண்டிசெட்டிபாளையம் மற்றும் புகளூர் பகுதிகளில் உள்ள துணை மின் நிலையங்களில் இருந்துதான் மின்விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

அதனால் ரெங்கநாதபுரத்தைச் சுற்றியுள்ள நெடுங்கூர், அத்திபாளையம், கே.பாளையம், வேலம்பாளையம், முன்னூர், மோளபாளையம், க.பரமத்தி, காங்கேயம்பாளையம் மற்றம் புதுக்கநல்லி ஆகிய பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் நிலவியது. அதனால் விவசாய மோட்டார்களும், குடிநீர் பயன்பாட்டில் உள்ள மோட்டார்களும் அடிக்கடி பழுதடையும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலைமையை மாற்ற ரெங்கநாதபுரத்தில் புதிய 33/11 மெகாவட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் ரெங்கநாதபுரத்தில் ரூ.362.98 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள துணை மின்நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் இன்று(14.9.2018) துவக்கிவைத்தார்கள்.

இந்த துணை மின்நிலையத்தின் மூலம் மேற்சொன்ன 15 கிராமங்களும் அதனைச் சுற்றியுள்ள 70 குக்கிராமங்களும் பயன்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் ஆயுதப்படைக்கான நிர்வாக தலைமை அலுவலக கட்டடம் ரூ.3 கோடியே 78 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் காவல் கண்காணிப்பாளர் அறை, காவல் துணை கண்காணிப்பாளர் அறை, கலந்தாய்வுக்கூடம், ஆயுத வைப்பறை, உடற்பயிற்சி கூடம், முடி திருத்தகம் உள்ளிட்ட வசதிகள் உள்ளன.

அதனைத்தொடர்ந்து ரெங்கநாதபுரத்திலும், காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (பொ)திருமதி.திஷா மித்தல், சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ் ஆகியோர் குத்துவிளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பாஸ்கரன், தமிழ்நாடு மின்சார மேற்பார்வை பொறியாளர் திரு.விநோதன், செயற்பொறியாளர்கள் திரு.சிவக்குமார், திருமதி செந்தாமரை, உதவி செயற்பொறியாளர்கள் திரு.ஜெகதீசன், திரு.மூர்த்தி, திரு.சரவணப்பெருமாள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் திரு.காளியப்பன், திரு.கிருஷ்ணன், திரு.மார்க்கண்டேயன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**